**1. சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் எண்ணிலக்க நவீன தொழில்நுட்ப மின்னணு கருவியுடன் கூடிய கோளரங்கம் அமைத்து, பி.எம்.பிர்லா கோளரங்கத்தை நவீனமயமாக்குதல்**

(Modernisation of B.M.Birla Planetarium with State-of-the–Art Technology Digital Planetarium System at Periyar Science and Technology Centre, Chennai)

சென்னை, பெரியார் அறிவியல் தொழில்நுட்ப மையத்தில் அமைக்கப்பட்டுள்ள பி.எம்.பிர்லா கோளரங்கத்தில், கோளரங்கக் காட்சிகளை மக்கள் மகிழ்வுடன் கண்டுகளிக்கும் விதத்திலும், வானவியல் கருத்துக்களை திறம்பட மக்களுக்கு தெரிவிக்கும் விதத்திலும், நவீன தொழில்நுட்ப எண்ணிலக்க மின்னணு கருவியுடன் கூடிய கோளரங்கம் ரூ.10 கோடி செலவில் அமைத்து பிர்லா கோளரங்கத்தை மேம்படுத்த **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.** புதிதாக அமைக்கப்படவுள்ள எண்ணிலக்கக் கோளரங்கம் மாணவர்களுக்கு வானவியல் கருத்துக்களைக் கற்பிக்கும் வழிமுறைகளும், புதுயுகக் கோளரங்கங்களின் சிறப்பான ஒலி, ஒளி அம்சங்களைக் கொண்டதாக இருக்கும். இதனால் அனைவரும் வியத்தகு அனுபவம் பெற்று வானவியல் கருத்துக்களை உணர்ந்து புரிந்து கொள்வதோடு மாணவர்களுக்கு அறிவியல் ஆர்வத்தை ஏற்படுத்துவதாகவும் அமையும்.

2. **சென்னைப் பல்கலைக்கழகத்தில் சூரிய சக்தியைக் கொண்டு எல்லா வளாகத்திற்கும், புதிதாகக் கட்டப்படும் கட்டிடங்களுக்கும் ஒளி வழங்குதல்**
   (All campuses and newly constructed buildings in University of Madras to be illuminated with solar energy)

   **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** இலவசமாக கிடைக்கும் இயற்கை ஆற்றலான சூரிய ஆற்றலைப் பயன்படுத்தி மின்நுகர்வு கட்டணங்களை சேமிக்க ஏதுவாக சென்னைப் பல்கலைக்கழகத்தின் அனைத்து வளாகங்களுக்கும், புதிதாக கட்டப்படும் கட்டடங்களுக்கும் ரூ.**52.50** இலட்சம் செலவில் சூரிய சக்தி மூலம் மின் ஒளி வழங்க ஆவன செய்யப்படும்.

**3. சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில் திறன் அடிப்படையிலான வாழ்க்கை தொழில் சார்ந்த நெசவு மற்றும் உணவு அறிவியல் இளநிலை பட்டப் படிப்பு அறிமுகம்.**

(Introduction of Skill based B.Voc Programme for Textile and Food Science Courses in Periyar University, Salem)

சேலம், பெரியார் பல்கலைக்கழகத்தில் **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணையின்படி** வாழ்க்கை தொழில் சார்ந்த நெசவு மற்றும் உணவு அறிவியல் இளநிலை பட்டப்படிப்பு அறிமுகப்படுத்தப்பட உள்ளது. இப்படிப்பை படித்தவர்கள் தொழிற்சாலைகளுக்கும் மற்றும் தொழில் நிறுவனங்களுக்கும் ஏற்ற ஆற்றல் சார்ந்த கல்வியினை செயல்முறை வாயிலாக பயில்வதால் தொழிற்சாலைகளுக்கு தேவையான ஆற்றல்சார் பணியாளர்கள் கிடைப்பதுடன் அவர்களாகவே தொழில் நிறுவனங்களைத் துவங்கி செயல்படுத்த இயலும். இத்தகு ஆற்றல் சார் கல்வி சமூக நிலையில் பின்தங்கிய மாவட்டங்களான தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரியில் வாழும் பெண்கள் படிக்கும் வாய்ப்பு மற்றும் தொழிற்சார் கல்வியைப் பயிலும் நிலைக்கு முன்னேறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்.

**4. சென்னை, தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்திற்கென கல்விப் புலக் கட்டிடம் கட்டுதல்**

(Construction of Academic Block in Tamil Nadu Open University, Chennai)

ஆசிரியர்கள் முழு நேர ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும் மற்றும் தமிழகத்தில் திறந்தநிலை மற்றும் தொலைநிலை கல்வியை வளர்ப்பதற்கும் உதவும் வகையில் ரூ.**8.44** கோடி செலவில் சென்னை, தமிழ்நாடு திறந்த நிலைப் பல்கலைக்கழகத்திற்கு கல்விப்புல கட்டிடம் கட்ட **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

**5. கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தில் நீச்சல் குளம் அமைத்தல்**

(Construction of Swimming Pool in Bharathiar University, Coimbatore)

பாரதியார் பல்கலைக்கழக மாணவ, மாணவியர் **3000** பேர் நேரடியாக பயன்பெறும் வகையிலும், இப்பல்கலைக்கழகத்தின் **112** இணைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் விளையாட்டில் மேம்படுவதற்காகவும், ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்கும் விதத்தில் பயிற்சி பெற மற்றும் நீச்சல் போட்டிகள் நடத்த ஏதுவாக, **50** மீட்டர் நீளத்தில் பன்னாட்டு தரத்துடன் கூடிய நீச்சல் குளம் ரூ.**5.95** கோடி செலவில் அமைக்க **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.**

6. **கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தில் மகளிர் தங்கும் விடுதி கட்டுதல்**

(Construction of Women’s Hostel in Bharathiar University, Coimbatore)

**மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி** மாணவியர் நலன்கருதி 26,928 சதுர அடியில் தரைதளமும் 19,639 சதுர அடியில் முதற்தளமும் கொண்ட நவீன அமைப்புடன் 160 பேர் தங்கக்கூடிய மாணவியர் விடுதி ரூ.5.5 கோடி செலவில் கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தில் கட்டப்படும்.

**7. கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தில் ஆடவர் தங்கும் விடுதி கட்டுதல்**

(Construction of Men’s Hostel in Bharathiar University, Coimbatore)

**மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி** மாணவர் நலன்கருதி 26,928 சதுரஅடியில் தரை தளமும், 19,639 சதுர அடியில் முதல்தளமும் கொண்ட நவீன அமைப்புடன் கூடிய 160 பேர் தங்கக்கூடிய மாணவர் விடுதி ரூ.5.5 கோடி செலவில் கோயம்புத்தூர், பாரதியார் பல்கலைக்கழகத்தில் கட்டப்படும்.

**8. திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் அறிவியல் சார்ந்த விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய உடல் தகுதி மையம் அமைத்தல்**

(Construction of Fitness Centre with Sports Science Backup at Bharathidasan University, Tiruchirappalli)

திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் ரூ. **2.4** கோடி செலவில் **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி** அறிவியல் சார்ந்த விளையாட்டு உபகரணங்களுடன் கூடிய உடல்தகுதி மையம் அமைக்கப்படும். இந்த விளையாட்டு மையம் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய கட்டமைப்பு மற்றும் உபகரணங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும். பயிற்சிக் கூடங்களில் விளையாட்டு வீரர்களின்/ வீராங்கனைகளின் விளையாட்டு திறன்களை நுட்பமாக அறிந்து அவர்களுடைய செயல்திறனை கூட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**9. திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழக காஜாமலை வளாகத்திலுள்ள மகளிர் விடுதி கட்டுதல்.**

(Construction of Women's Hostel at Khajamalai Campus of Bharathidasan University, Tiruchirappalli)

திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் 10 உறுப்புக் கல்லூரிகள் உள்ளிட்ட 123 இணைவு பெற்ற கல்லூரிகளில் பயிலும் மாணவிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி**, கிராமப்புற ஏழை மாணவிகளின் சேர்க்கையை அதிகரிக்கும் பொருட்டு ரூ.1.7 கோடி செலவில் காஜாமலை வளாகத்தில் ஒரு மகளிர் விடுதி கட்டப்பட உள்ளது.

**10. திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் அறிவினை மேம்படுத்த மற்றும் செயல்திறன்மிக்க மனித வளமை மற்றும் வாழ்க்கை தொழில் மேம்படுத்தவும் மையம் அமைத்தல்**

(Establishment of DDU Centre for KAUSHAL in Bharathidasan University, Tiruchirappalli (Deen Dayal Upadhyay)–Knowledge Acquisition and Upgradation of Skilled Human Abilities and Livelihood)

தொழில் நிறுவனங்களின் தேவைக்கேற்ப திறன்மிக்க மனித சக்தியினை பல்வேறு நிலைகளில் உருவாக்க **மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி** ரூ.**3.50** கோடி செலவில் திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் அறிவினை மேம்படுத்தவும், செயல்திறன்மிக்க மனித வளமை மற்றும் வாழ்க்கைத் தொழிலை மேம்படுத்தவும் மையம் அமைக்கப்படும். இது முதுநிலைப் படிப்பு மற்றும் ஆராய்ச்சி நிலைகளில், திறன்சார் கல்வி மற்றும் மேம்பாடு, தொழில் முனைதல், வேலைவாய்ப்பு, தொழில் சந்தையின் போக்கு ஆகியவற்றை பற்றிய பரந்த அறிவை மாணவர்களுக்கு அளிக்கும்.

11. **திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நன்னீர் கடல் நீர் வாழ் நுண்பாசிகள் மற்றும் சயனோபாக்டீரியாக்கள் சேமிப்பிற்கான தேசியக் களஞ்சியம் அமைத்தல்.**

(Establishment of National Repository for Microalgae and Cyanobacteria)

**மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்படி** ரூ.1.7 கோடி செலவில் திருச்சிராப்பள்ளியில் உள்ள பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நன்னீர் கடல் நீர் வாழ் நுண்பாசிகள் மற்றும் சயனோபாக்டீரியாக்கள் சேமிப்பிற்கான தேசியக் களஞ்சியம் அமைக்கப்படவுள்ளது. தேசிய அளவிலான இக்களஞ்சியமானது இத்துறைசார் அறிவியல் அறிஞர்களுக்கும், ஆராய்ச்சி மாணவர்களுக்கும் மிகுந்த பயனுள்ளதாக அமையும். அமெரிக்காவிலுள்ள அமெரிக்கன் மாதிரி நுண்ணுயிர் வளர்ப்பு மற்றும் சேகரிப்பு மையம், பிரான்ஸ் நாட்டின் ஃபாஸ்டர் நுண்ணுயிர் வளர்ப்பு மற்றும் சேகரிப்பு மையம், இங்கிலாந்தில் அமைந்துள்ள பாசிகள் மற்றும் புரோட்டோசோவாக்களின் மையம் முதலியவற்றை போன்று இக்களஞ்சிய மையம் சிறப்பாக அமையவுள்ளது. நுண்பாசிகள் மற்றும் சயனோ பாக்டீரியாக்களின் உயிரினவளம், அவற்றின் வகைப்பாட்டியலின் முக்கியத்துவம் ஆகியவற்றை மாணவர்களுக்கு உணர்த்தவும் அவர்களுக்கு இத்துறையில் ஆர்வத்தினை உண்டாக்கி அவர்களை இத்துறையில் சிறந்த அறிவியல் வல்லுநர்களாக உருவாக்கவும் இம்மையம் உதவும்.

**பி.பழனியப்பன்**
**உயர்கல்வித் துறை அமைச்சர்**